குளச்சல் நகராட்சி

குளச்சல் நகராட்சி மன்றத்தின் அவசரக்கூட்டம் செப்டம்பர் திங்கள் 08–ம் நாள் வியாழக்கிழமை காலை 10.30 மணிக்கு நடைபெறும். தாங்கள் தவறாது கலந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

தலைவர்
குளச்சல் நகராட்சி மன்றம்

**பொருள் எண்: 1**

இந்நகராட்சியில் பணிபுரிந்து வயதுமுதிர்வின் காரணமாக ஒய்வு பெற்ற திருமதி அ. நிர்மலாஜாய், (இ.நி.உ) செல்வி சி.பாக்யலீலா (துட்டச்சர்) மற்றும் திருமதி வள்ளியம்மாள்(து.ப) ஆகியோருக்கு சிறப்பு சேமநலநிதி நகராட்சி பங்களிப்பு தொகை ரூ.10000/–ம் வீதம் மூன்று நபர்களுக்கு ரூ.30000/– வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.கு** மன்றம் அனுமதி வழங்கலாம்

ந.க.எண்: சி1/1025/2016

**தீர்மானம் எண்.1550, தீர்மானிக்கப்பட்டது**

**பொருள் எண்: 2**

இந்நகராட்சிக்குட்பட்ட சிங்கன்காவு பகுதியில் வீட்டு எண் 17–168/4–ன் அருகில் உள்ள புதிய தெருவில் ஏழு மின்கம்பத்தில் புதிதாக மின் விளக்குகள் அமைக்கவும் மேலும் சிங்கன்காவில் க.எண்: 17–167/3–யின் அருகில் உள்ள மின்கம்பம் எண்: F II /12–யில் புதிதாக மின் விளக்கு அமைக்கவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.கு** மன்றம் அனுமதி வழங்கலாம்

ந.க.எண்: பி2/4378/2010

**தீர்மானம் எண்.1551, தீர்மானிக்கப்பட்டது**

**பொருள் எண்: 3**

இந்நகராட்சிக்கு சொந்தமான உப்பளம் உரக்கிடங்கில் திடக்கழிவு மேலாண்மை பணிகள் மேற்கொள்ள மாவட்ட ஆட்சி தலைவர் அவர்களின் தினக்கூலி பட்டியலின்படி 11 நபர்கள் கொண்ட ஸ்டார் ஆண்கள் சுய உதவி குழுவின் மூலம் பணிகள் மேற்கொள்ள ஜுலை–2016 முதல் செப்டம்பர் 2016 வரை 89 நாட்களுக்கு இந்நகர் மன்ற தீர்மானம் எண்: 1512 நாள்: 30.06.2013 ஒப்புதல் பெறப்பட்டு பணியமர்த்தப்பட்டது. மேலும் தற்போது இக்குழுவில் உள்ள நபர் ஒருவர் தொடர்ந்து பணிக்கு வராததால் அவரை தவிர மீதமுள்ள 10 நபர்கள் கொண்ட ஸ்டார் ஆண்கள் சுய உதவிக்குழுவின் மூலம் 89 நாட்களுக்கு (அக்டோபர் 2016 முதல் டிசம்பர் 2016 வரை)பணிக்கு அமர்த்த கால நீட்டிப்பு செய்யவும் அதற்கான உத்தேச செலவு தொகை ரூ.300000/–க்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.கு** மன்றம் அனுமதி வழங்கலாம்

ந.க.எண்: எச்1/1368/2014

**தீர்மானம் எண்.1552, தீர்மானிக்கப்பட்டது**

**பொருள் எண்: 4**

இந்நகராட்சி பொது சுகாதார பிரிவிற்கு போதுமான துப்புரவு பணியாளர்கள் இல்லாமையால் பொது சுகாதார நலன் கருதி வடிகால்கள் தூர் வாருதல், அபேட் மருந்து தெளித்தல் ஆகிய பணிகளை தினமும் மேற்கொள்ள மாவட்ட ஆட்சி தலைவர் அவர்களின் தினக்கூலி பட்டியலின் படி, 17 நபர்கள் கொண்ட ஜெயம் பெண்கள் சுய உதவிக்குழு மூலம் பணிகள் மேற்கொள்ள ஜுலை 2016 முதல் செப்டம்பர் 2016 வரை 89 நாட்களுக்கு இந்நகர் மன்றத் தீர்மானம் எண்: 1513 நாள்: 30.06.2014—ல் ஒப்புதல் பெறப்பட்டு பணியமர்த்தப்பட்டது.மேலும் 11 நபர்கள் பணி பார்த்ததில் ஒருவர் நிரந்தரமாக பணிக்கு வராததால் பெண்கள் குழுவில் ஒருவர் கூடுதலாக பணிக்கு அமர்த்த வேண்டியுள்ளதால் 18 நபர்கள் கொண்ட ஜெயம் பெண்கள் சுய உதவிக்குழு மூலம் 89 நாட்களுக்கு (அக்டோபர் 2016 முதல் டிசம்பர் 2016 வரை) மாவட்ட ஆட்சி தலைவர் நாகர்கோவில் அவர்களின் செயல்முறை ந.க.எ.ண்: அ1/11060/13 நாள் 25.04.2013 —ல் தெரிவித்துள்ள தினக்கூலி அடிப்படையில் பணிக்கு அமர்த்த கால நீட்டிப்பு செய்யவும் அதற்கான உத்தேச செலவு தொகை ரூ. 530000/—க்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.கு** மன்றம் அனுமதி வழங்கலாம்

ந.க.எண்: எச்1/1177/2014

**தீர்மானம் எண்.1553, தீர்மானிக்கப்பட்டது**

**பொருள் எண்: 5**

இந்நகராட்சிக்கு 2016—2017—ம் ஆண்டிற்கு தேவையான படிவங்கள், பதிவேடுகள் மற்றும் கணணி பிரிவிற்கு தேவையான எழுது பொருட்கள் வாங்க உத்தேச செலவு தொகை ரூ.500000/—க்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.கு** மன்றம் அனுமதி வழங்கலாம்

ந.க.எண்: எச்1/1347/2015

**தீர்மானம் எண்.1554, தீர்மானிக்கப்பட்டது**

**பொருள் எண்: 6**

இந்நகராட்சி பொறியியல் பிரிவில் குடிநீர் வினியோக பணிகளுக்கு தேவையான 4 பணியாளர்களை, கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களால் நிர்ணயம் செய்யப்படும் தினக்கூலி அடிப்படையில் , ஒப்பந்ததாரர் மூலம் 89 நாட்களுக்கு (ஜுலை 2016 முதல் செப்டம்பர் 2016 வரை) பணிக்கு அமர்த்துவதற்காக, இந்நகர்மன்றத் தீர்மானம் எண் 1492 நாள் 31/5/2016—ன் படி, பெறப்பட்ட அனுமதி காலம் செப்டம்பர் 2016—வுடன் முடிவடையும் நிலையில், குடிநீர் வினியோக பணிகளின் முக்கியத்துவத்தை கருத்தில் கொண்டு, தொடர்ந்து வரும் 89 நாட்களுக்கு (அக்டோபர் 2016 முதல் டிசம்பர் 2016 வரை) 4 பணியாளர்களை தினக்கூலி அடிப்படையில் ஒப்பந்ததாரர் மூலம் பணிக்கு அமர்த்துவதற்கும், அதற்கான உத்தேச செலவுத் தொகை ரூ.1,20,000/—ஐ இந்நகராட்சி பொது நிதியின் கீழ் மேற்கொள்வதற்கும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது

**அ.கு** பணியின் முக்கியத்துவத்தை கருத்தில் கொண்டு மன்றம் அனுமதி வழங்கலாம்

ந.க.எண்:இ2/2691/2014

**தீர்மானம் எண்.1555, தீர்மானிக்கப்பட்டது**

**பொருள் எண்: 7**

இந்நகராட்சியில் 2014–2015–ம் ஆண்டுக்கான வருட கணக்கு முடித்த திரு,ஸ்ரீனிவாசன் கன்சல்டன்ட் அவர்களால் ஆண்டு கணக்கு முடித்து தணிக்கை துறைக்கு அனுப்பபட்டு தணிக்கையும் முடிவுபெற்றுள்ளது. எனவே 2014–2015–ம் ஆண்டு கணக்கு முடித்த வகையில் ரூ. 20000/– ஐ திரு.வ.ஸ்ரீனிவாசன் அவர்களுக்கு வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.கு** மன்றம் அனுமதி வழங்கலாம்

ந.க.எண்: பி1/2585/2009

**தீர்மானம் எண்.1556, தீர்மானிக்கப்பட்டது**

**பொருள் எண்: 8**

இந்நகராட்சியில் ஒப்பந்ததரார் பில்லில் பிடித்தம் செய்யப்பட்டுள்ள முன்வைப்பு தொகைகள் அனைத்தும் காலங்கடந்த வைப்பு தொகை பதிவேட்டில் உள்ளன. எனவே மேற்கண்ட தொகைகள் வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.மேலும் காலங்கடந்த வைப்பு தொகையில் உள்ள பெயர்கள் பின்வருமாறு,

| | | |
|---|---|---|
| 1 | OHMSTRONICS LIGHTING SOLUTION Chennai | ரூ.19740/– |
| 2 | திரு. தேவகரிம்சாம் ஒப்பந்ததாரர் | ரூ.2,52,000/– |
| 3 | Asiatech Engineering Associates | ரூ.4,72,500/– |

**அ.கு** மன்றம் அனுமதி வழங்கலாம்

ந.க.எண்: பி1/1529/2016

**தீர்மானம் எண்.1557, தீர்மானிக்கப்பட்டது**

**பொருள் எண்: 9**

இந்நகராட்சியிலுள்ள மூன்று கணினிகள் பழுதாகிவிட்டபடியாலும், AMC முடிவடைந்து விட்டதாலும் பணியின் அவசியம் கருதி பழுது நீக்க Service Charge ஆக ரூ.600/–அலுவலக பொது நிதியிலிருந்து செலவழிக்கப்பட்டதை மன்றத்தின் பார்வைக்கும் தகவலுக்கும் வைக்கப்படுகிறது.

**அ.கு** மன்றம் அனுமதி வழங்கலாம்

ந.க.எண்: அ2/544/2006

**தீர்மானம் எண்.1558, தீர்மானிக்கப்பட்டது**

**பொருள்எண்:10**

இந்நகராட்சியில் 15.08.2016 அன்று நடைபெற்ற சுதந்திர தினவிழா நிகழ்ச்சிக்காக புதிய மூவர்ணக் கொடி வாங்கயது, தோரணங்கள், மைக்செட் மற்றும் இதர செலவுத் தொகை ரூ.2550/– வழங்க மன்ற அனுமதி வேண்டப் படுகிறது.

**அ.கு** மன்றம் அனுமதி வழங்கலாம்

ந.க.எண்: எச்1/1829/2015

**தீர்மானம் எண்.1559, தீர்மானிக்கப்பட்டது**

**பொருள் எண்: 11**

இந்நகராட்சி பொது சுகாதாரப் பிரிவிற்கு தேவையான கிருமி நாசினிகள் இருப்பில் குறைவாக உள்ளதால் பொது சுகாதார பயன்பாட்டிற்கு தேவையான கீழ்காணும் பொருட்கள் வாங்குவதற்கு உத்தேச செலவுத்தொகை ரூ.200000/-க்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

| | | |
|---|---|---|
| 1. | நீர்த்த சுண்ணாம்புகள் | 3000 கிலோ |
| 2. | பிளீச்சிங் பவுடர் | 2500 கிலோ |
| 3. | பினாயில் | 1000 லிட்டர் |

**அ.கு** மன்றம் அனுமதி வழங்கலாம்

ந.க.எண்: எச்1/1388/2009

**தீர்மானம் எண்.1560, தீர்மானிக்கப்பட்டது**

**பொருள் எண்: 12**

இந்நகராட்சிக்கு சொந்தமான கவியரசு கண்ணதாசன் வணிக வளாக கடை எண்: 27,28 மற்றும் கலைஞர் கருணாநிதி வணிக வளாக கடை எண்: 1,2 மற்றும் 18,19-ன் இடை சுவர்களை நீக்குவதற்கு அனுமதி வழங்க கேட்டு சம்மந்தப்பட்ட வாடகை தாரர்களிடமிருந்து விண்ணப்பங்கள் பெறப்பட்டுள்ளது.அதன் அடிப்படையில் மேற்படி கடைகளின் இடைசுவர்களை நீக்குவதற்கு கீழ்காணும் விவரப்படி மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது.

| வ.எண் | வாடகைதாரர் பெயர் &முகவரி | வணிக வளாகத்தின் பெயர்& கடை எண் | செலுத்தப்பட வேண்டிய மதிப்பீட்டு கட்டணம் |
|---|---|---|---|
| 1. | திரு. S.கிங்சிலி மில்ட்டன் ராஜ், நெல்லிவிளை | கவியரசு கண்ணதாசன் வணிக வளாகம் 27,28 | ரூ.18,000/- |
| 2. | திருமதி.C. நிர்மலா களிமார் | கலைஞ ர் கருணாநிதி வணிக வளாகம் 1,2 | ரூ.18,000/- |
| 3. | திரு. T.ஜஸ்டின் செல்வகுமார் களிமார் | கலைஞர் கருணாநிதி வணிக வளாகம் 18,19 | ரூ.18,000/- |

மேற்காணும் தொகையினை செலுத்தி, மேற்படி கடைகளின் இடைசுவரை அகற்றும் பணியினை மேற்கொள்ள அனுமதி வழங்குவதற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.கு** கட்டிடம் ஏறத்தாழ சுமார் 10 வருடங்களுக்கு மேலாக உள்ளது.ஆகவே வாடகைதாரர்களின் வியாபார வசதியை கருத்தில் கொண்டு மன்றம் அனுமதி வழங்கலாம்.

ந.க.எண்: இ1/1790/2016

**தீர்மானம் எண்.1561, தீர்மானிக்கப்பட்டது**

**பொருள் எண்: 13**

இந்நகராட்சிக்கு சொந்தமான டாக்டர் அம்பேத்கார் வளாகத்தில் தரை வாடகை மற்றும் பேருந்து நிலைய நுழைவு கட்டணம் வசூல் செய்வதற்கு 2016-17-ம் ஆண்டிற்கு ரெசீதுகள் அச்சடிக்க உத்தேச தொகை ரூ.50,000 ஒதுக்கீடு செய்ய மன்றம் அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.கு** மன்றம் அனுமதி வழங்கலாம்

ந.க.எண்: அ1/11062/2015

**தீர்மானம் எண்.1562, தீர்மானிக்கப்பட்டது**

**பொருள் எண்: 14**

இந்நகராட்சிக்கு சொந்தமான பெருந்தலைவர் காமராஜர் பேருந்து நிலையத்தில் அமைந்துள்ள அம்மா உணவகத்திற்கு மின்சாரம் இல்லாத நாட்களில் ஜெனரேட்டர் உபயோகபடுத்தியதற்கு வாடகை தொகையாக ரூ. 6000/— திரு. ஐ.பிரவின் குளச்சல் அவர்களுக்கு வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.கு** மன்றம் அனுமதி வழங்கலாம்

ந.க.எண்: அ1/1117/2016

**தீர்மானம் எண்.1563, தீர்மானிக்கப்பட்டது**

**பொருள் எண்: 15**

குளச்சல் நகராட்சியில் 2016—ம் ஆண்டு நடைபெறவிருக்கும் நகர்மன்ற உள்ளாட்சி தேர்தலுக்கான 24 வார்டுகளுக்குரிய வாக்குச் சாவடிகளின் பட்டியல் மாவட்ட ஆட்சி தலைவர் மற்றும் மாவட்ட தேர்தல் அலுவலர் அவர்களால் ஒப்புதல் வழங்கப்பட்டது,ஒப்புதல் வழங்கப்பட்ட வாக்குச்சாவடிகளின் பட்டியல் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும்

| வார்டு எண் | வாக்குச்சாவடி எண் | வாக்குச்சாவடியின் பெயர் |
|---|---|---|
| 1 | 1 | அரசுதொடக்கப்பள்ளி,சாஸ்தான்கரை. (பிரதான கட்டிடத்தின் தெற்குபாகம்) |
| 2 | 2(ஆண்) | அரசு நடுநிலைப்பள்ளி.(நடுக்கட்டிடம்) |
| 2 | 2(பெண்) | அரசு நடுநிலைப்பள்ளி.(நடுக்கட்டிடம்) |
| 3 | 3 | அரசு பெண்கள் தொடக்கப்பள்ளி,குளச்சல் |
| 4 | 4(ஆண்) | கிராம அலுவலகம்,குளச்சல் |
| 4 | 4(பெண்) | வருவாய் ஆய்வாளர் அலுவலகம்,குளச்சல் |
| 4 | 4(அ.வா) | அரசு பெண்கள் தொடக்கப்பள்ளி,குளச்சல் |
| 5 | 5 | குழந்தைகள் வளர்ச்சி திட்ட கட்டிடம், கொட்டில்பாடு. (வடக்கு கட்டிடம் மேற்கு பாகம்) |
| 6 | 6 | குழந்தைகள் வளர்ச்சி திட்ட கட்டிடம், கொட்டில்பாடு. (நடு கட்டிடம்) |
| 7 | 7 | குழந்தைகள் வளர்ச்சி திட்ட கட்டிடம், கொட்டில்பாடு. (வடக்கு கட்டிடம் கிழக்கு பாகம்) |
| 8 | 8 | துறைமுக அலுவலகம், இந்திராகாலனி |
| 9 | 9 | சத்துணவுகூடம்,மரமடி |
| 10 | 10 | புனித மரியன்னை தொடக்கப்பள்ளி, (தெற்கு கட்டிடம் கிழக்குப்பகுதி) |
| 11 | 11 | புனித மரியன்னை தொடக்கப்பள்ளி, (பிரதான கட்டிடம் நடுப்பக்கம்) |
| 12 | 12 | புனித மரியன்னை தொடக்கப்பள்ளி, (பிரதான கட்டிடம் மேற்குபக்கம்) |
| 13 | 13 | புனித மரியன்னை தொடக்கப்பள்ளி, (பிரதான கட்டிடம் கீழ் மேற்குபக்கம்) |
| 14 | 14 | புனித மரியன்னை தொடக்கப்பள்ளி, (புதிய கட்டிடம்) |
| 15 | 15 | புனித மரியன்னை தொடக்கப்பள்ளி, (புதிய கட்டிடம்) |
| 16 | 16 | புனித அன்னாள் தொடக்கப்பள்ளி ,களிமார். (கிழக்கு பிரதான கட்டிட வடக்கு பக்கம்) |

| | | |
|---|---|---|
| 17 | 17 | புனித அன்னாள் தொடக்கப்பள்ளி ,களிமார்<br>.( பிரதான கட்டிட தெற்கு பக்கம்) |
| 18 | 18 | புனித அன்னாள் தொடக்கப்பள்ளி களிமார்<br>.( பிரதான கட்டிட தெற்கு பக்கம்) |
| 19 | 19 | புனித அன்னாள் தொடக்கப்பள்ளி ,களிமார்.<br>( வடக்கு பிரதான கட்டிடத்தின் கிழக்கு பாகம்) |
| 20 | 20 | அரசு உயர்நிலைப்பள்ளி, இலப்பவிளை.<br>(வடக்கு கட்டித்தின் கிழக்கு பாகம்) |
| 21 | 21 | அரசு உயர்நிலைப்பள்ளி, இலப்பவிளை.<br>(பிரதான கட்டிடத்தின் மேற்கு பாகம்) |
| 22 | 22 | அரசு உயர்நிலைப்பள்ளி, இலப்பவிளை.<br>.(கட்டிடத்தின் கிழக்கு பாகம்) |
| 23 | 23 | அரசு தொடக்கப்பள்ளி சாஸ்தாங்கரை.<br>(பிரதான கட்டிடத்திடன் வடக்கு பாகம்) |
| 24 | 24 | புனித மரியன்னை மேல்நிலைப்பள்ளி<br>.(தெற்கு கட்டிடம்) |

அ.கு மாவட்ட ஆட்சி தலைவர்,நாகர்கோவில் அவர்களால் உள்ளாட்சி தேர்தல் 2016–க்கு அங்கீகாரம் அளிக்கப்பட்ட வாக்குச்சாவடியின் பட்டியலை மன்றக் ஒப்புதல் அளிக்கலாம்.

**தீர்மானம் எண்.1564, தீர்மானிக்கப்பட்டது**

**பொருள் எண்.1**

இந்நகராட்சி பொது சுகாதாரப்பிரிவு மினி லாறி எண்.TN-74-T-5508-க்கு தகுதி சான்று புதுப்பிக்க வேண்டியுள்ளதால் கீழ்க்கண்ட பழுதுகளை சரிசெய்ய வேண்டியுள்ளது.

1. முழு சர்வீஸ் மற்றும் கிரீஸ் வைத்தல்
2. மைனர் பேச் ஒர்க் (டிங்கர் ஒர்க்)
3. வீல் அலைய்ன்மெண்ட் மற்றும் வீல் ஷேக் பார்த்தல்
4. வைபர் பிளேடு மாற்றுதல் மற்றும் எலக்ட்ரிக் செக்கப் செய்தல்
5. ஒரு பக்க சைடு கண்ணாடி மாற்றுதல்
6. கிளாட் அசம்பிளி மாற்றுதல்
7. முழு பெயின்ட் அடித்தல் மற்றும் சில இதர பணிகள்

மேற்படி பழுதுகளை சரி செய்ய உத்தேச செலவுத் தொகை ரூ.31,000/—க்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு மன்றம் அனுமதி வழங்கலாம்

ந.க.எண்.எச்1/2313/2009

**தீர்மானம் எண்.1565, தீர்மானிக்கப்பட்டது**

**பொருள் எண்.2**

இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு 2—ல் அமைந்துள்ள வி.கே.பி மழலையர் தொடக்கப்பள்ளி கட்டிடத்திற்கு சொத்துவரி விலக்கு அளிக்க நகராட்சியில் மனு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. கல்வி கட்டிடங்களுக்கு நகராட்சி சட்ட விதி 83-C -ன் படி விலக்கு அளிக்க தெளிவுரை வழங்கப்பட்டுள்ளது. அதன்படி மேற்படி கல்வி நிறுவனத்திற்கு சொத்துவரி விலக்கு அளித்திட மன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.

அ.கு சட்டப்பிரிவு 83-C —ன் படி வரிவிலக்கு அளிக்கலாம்

ந.க.எண்.ஆ1/1871/2016

**தீர்மானம் எண்.1566, தீர்மானிக்கப்பட்டது**

**பொருள் எண்.3**

குளச்சல் நகராட்சிக்குட்பட் பகுதியில் திறந்த வெளியில் மலம் கழிக்கும் பழக்கம் இல்லை என்பதினால் இந்நகராட்சியை திறந்த வெளியில் மலம் கழிக்கும் பழக்கம் இல்லாத நகராட்சி என அறிவிப்பு வழங்கிட (ODF Free ) மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு மன்றம் அனுமதி வழங்கலாம்

ந.க.எண்.எச்1/2042/2016

**தீர்மானம் எண்.1567, தீர்மானிக்கப்பட்டது**

**பொருள் எண்.4**

இந்நககராட்சி பொறியியல் பிரிவில் குடிநீர் வினியோக பணிகளுக்கு தேவையான 4 பணியாளர்களை 89 நாட்களுக்கு (அக்டோபர் 2016 முதல் டிசம்பர் 2016 வரை) பணிக்கு அமர்த்துவதற்கான உத்தேச செலவுத் தொகை ரூ.1,20,000/—க்கு இந்நகர்மன்றம் தனது தீர்மானம் எண்.1555 நாள் 08.09.2016—ன் மூலம் ஒப்புதல் அளித்துள்ளது. அதன் அடிப்படையில் 20.09.2016 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில், பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் குறித்த விவரம் பின்வருமாறு,

| | | |
|---|---|---|
| 1 | திரு.ற்றி.சுகுமாரன் ஒப்பந்ததாரர் | மதிப்பீட்டு விகிதம் |
| 2 | திரு.சி.செல்லநாடார் ஒப்பந்ததாரர் | மதிப்பீட்டை விட 0.61% அதிகம் |

மேற்காணும் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகல் திரு.சுகுமாரன், ஒப்பந்ததாரா் மதிப்பீட்டு விகிதத்தில் அளித்துள்ள ஒப்பந்தப்புள்ளியை ஏற்று பணி உத்தரவு வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.கு**

1. குடிநீர் வினியோக பணிகளின் முக்கியத்துவத்தை கருத்தில் கொண்டு, குறுகிய கால ஒப்பந்தப்புள்ளி கோரியதை மன்றம் அங்கீகரிக்கலாம்
2. திரு.ற்றி.சுகுமாரன் ஒப்பந்ததாரா் மதிப்பீட்டு விகிதத்தில் அளித்துள்ள ஒப்பந்தப்புள்ளியை ஏற்று பணி உத்தரவு வழங்க மன்றம் அனுமதி வழங்கலாம்

ந.க.எண்.இ1/2691/2014

**தீர்மானம் எண்.1568, தீர்மானிக்கப்பட்டது**

**பொருள் எண்.5**

2016–17 –ம் ஆண்டிற்கான இந்நகராட்சிக்கு செலுத்த வேண்டிய சொத்துவரி, தொழில் வரி, குடிநீர் கட்டணம், குத்தகை நிலுவை, லைசன்ஸ், கடை வாடகை மற்றும் இதர உரிமக்கட்டணங்கள் செலுத்த கேட்டு இந்நகராட்சி பொது மக்களுக்கு ஒலி பெருக்கி மூலம் விளம்பரம் செய்ய, பணியின் அவசர அவசியம் கருதியும் ஆணையாளர்(பொ) அவர்களின் நேரடி அறிவுரையின் படியும் பெறப்பட்ட இரண்டு விலைப்புள்ளிகள் விபரம் பின்வருமாறு

| வ.எண் | விலைப்புள்ளிதாரர்கள் பெயர் | விலைப்புள்ளி விகிதம் நாள் ஒன்றுக்கு (மைக்செட், டீசல், ஆயில், ஸ்பீக்கர், ஆம்பிளிபேயர் உட்பட) |
|---|---|---|
| 1 | பிரவின் சவுண்ட்ஸ் | ரூ2500/– |
| 2 | அஜின் சவுண்ட்ஸ் | ரூ.2600/– |

மேற்காணும் விலைப்புள்ளிகளின் பிரவின் சவுண்ட்ஸ் நிறுவனம் குறைந்த விலைப்புள்ளி ஏற்று பணி உத்தரவு வழங்கப்பட்டுள்ளதற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.கு**

1. பிரவின் சவுண்ட்ஸ், குளச்சல் நிறுவனத்திற்கு ரூ.2500/–க்கான குறைந்த விலைப்புள்ளியை மன்றம் ஏற்றுக் கொள்ளலாம்
2. அவசர அவசியத்தை கருத்தில் கொண்டு நகர்மன்ற தலைவரின் முன் அனுமதி பெற்று பணி உத்தரவு வழங்கியதற்கு மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண்.அ1/4826/2012

**தீர்மானம் எண்.1569, தீர்மானிக்கப்பட்டது**